# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 24 ஹிஜ்ரி 1435 ஷவ்வால் ஜூலை 2014

இலவசம்

# இனிய ரமலான் நோன்பளித்த ஏகனுக்கே புகழ் யாவும்



# முன்னோடிகளைப் பின்பற்றுவோம்! அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் பெருநாள் நற்செய்தி

நமது பெற்றோர், மூத்த தலைமுறை முன்னோடிகள், வழியை நாம் பின்பற்ற வேண்டும். அது நம் முன்னேற்றத்திற்கு நல்வழி! தகவல் தொடர்பு அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், நோன்புப் பெருநாள் செய்தியில் இதனைக் குறிப்பிட்டார். மூத்தோரைப் பரா மரிப்பது நமது கடமை என்றும், இஸ்லாமிய விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சருமான அவர் வலியுறுத்தினார். பெற்றோர், முன்னோர்களின் நற்பணிகளையும், நல்லன்பையும், தியாகத்தையும் பாராட்டும் அதேவேளையில், குடும்பப் பிணைப்பையும் நாம் மேம்படுத்திக்கொள்ள வேண்டும். ரமலான் நோன்பு மாதம் இதற்கு வழிவகை செய்துள்ளது. மூத்தோர், பெரியோரின் தன்னலமற்ற முயற்சிகளால்தான் நமக்கு நலமான, வளமான வாழ்க்கை கிடைத்துள்ளது. அதனால் அவர்களின் முதுமைக் காலத்தில் அவர்களைப் பராமரிப்பது நம் கடமை என்று டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்தார்.

“நமது சமூகம் கடந்த பல்லாண்டுகளாக பல துறைகளில் படிப்படியாக முன்னேற, பலதரப்பட்ட முயற்சியில் ஈடுபடுவதற்கு நமது முன்னோடித் தலைமுறையினர் தொலை நோக்குப் பார்வையுடன் செயல்பட்டுள்ளனர்.



அந்த மனப்போக்கு நமது இளையரிடையேயும் வலுவாகத் தொடர்ந்து, சமூகத்தில் பல உன்னதமான உச்சங்களை எட்டமுடியும் என நம்புகிறேன். ரமலான் மாதத்தில் இளையர்கள் பலர் தன்னலமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது மகிழ்ச்சியைத் தருகிறது. வசதியற்றவர்களுக்கு நிதியுதவியளிப்பது குறிப்பிடத்தக்கது” என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

முன்னோடித் தலைமுறையினரின் சுகாதாரச் செலவுகளைக் கட்டுப்படி யாக்குவதற்கு நமது அரசாங்கம் முன்னோடித் தலைமுறை திட்டம், மெடிஷீல்ட் லைஃப் திட்டம் போன்றவற்றை அறிமுகப்படுத்தி யுள்ளது. முன்னோடிகள் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கும், இன சமயப் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் வலுப்படுத்தி ஒற்றுமையான இன்றைய சூழலை உருவாக்குவதற்கு அரும்பங்காற்றியதற்கும் அங்கீகாரமாக இத்திட்டங்கள் அமைகின்றன என்று அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் பெருநாள் செய்தியில் சுட்டிக்காட்டினார்.

# முயிஸ் தலைமைநிர்வாகிக்கு தேசிய தின விருது

முயிஸ் தலைமை நிர்வாக அதிகாரி ஹாஜி அப்துல் ரஸாக் பின் ஹஸன் மரைக்கார் அவர்களுக்கு தேசியதின விருது வழங்கப் பட்டுள்ளது. பொது நிர்வாகப் பதக்கத்தை, 60 வயதினரான அவர் பெற்றார்.

ஹாஜி அப்துல் ரஸாக், 7 ஆகஸ்டு 2013 முதல், முயிஸ் தலைமை நிர்வாக அதிகாரியாக சேவையாற்றி வருகிறார். அவருடைய பதவி நியமனத்தை முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அறிவித்தார்.

ஹாஜி அப்துல் ரஸாக் 2007 ஜூன் மாதம் முயிஸின் செயலாளராகப் பொறுப்பேற்றார். அதற்குமுன் அரசாங்க சேவையிலும், முஸ்லிம் விவகாரப் பணிகளிலும் இருபது ஆண்டுகளுக்குமேல் ஈடுபட்டிருந்தார். சமூக வளர்ச்சி, இளையர் விளையாட்டுத் துறை அமைச்சின் முஸ்லிம் விவகாரங்களுக்கான சமூக உறவுப் பிரிவின் மூத்த துணை இயக்குநராகப் பணி புரிந்தார். அதற்குமுன் அவர் இளையர் விவகாரங்களுக்கான அதிகாரியாகவும் இருந்தார்.



தேசிய தின விருது தமது சேவைக்குக் கிடைத்துள்ள சமுதாய அங்கீகாரம் என

# பரிவுமிக்க உன்னத சமூகத்தை நிர்மாணிக்க அல்லாஹ்வின் நல்லருளை நாடுவோம்!

முயிஸ் பெருநாள் செய்தி

ரமலான் நோன்பையும், நற்பெருநாளையும் இவ்வாண்டு மீண்டும் நமக்கு அருளிய எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும். அவன் நமது நற்செயல்களை ஏற்றுக்கொண்டு நம் அனைவருக்கும் தனது அளவில்லா அருளை அள்ளி வழங்கட்டும். நமது வாழ்க்கையை வழிநடத்த நமக்கெல்லாம் தொடர்ந்து முன்மாதிரியாகத் திகழும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் மீது சாந்தியும் சமாதானமும் கூறுவோமாக.

ரமலான் முழுவதும் இளையருக்காகவும், முதியோருக்காகவும் நமது பள்ளிவாசல்கள் பற்பல நிகழ்ச்சிகளுக்கு முனைப்புடன் ஏற்பாடு செய்திருந்தன. நோன்பு திறப்பு முதல், குர்ஆன் பயிலரங்குகள், தொழுகை வகுப்புகள் வரை, பள்ளிவாசல்கள் மேற்கொள்ளும் அயராத முயற்சி, நமது சமூகத்தினரின் இஸ்லாமிய அறிவாற்றல் புரிந்துணர்வை மேம்படுத்தி, தொழுகை மற்றும் அல்-குர்ஆன் மூலம் நமது வாழ்க்கையை ஒளிமயமாக்கியிருக்கிறது. அத்துடன், எங்களது பங்காளிகளான முஸ்லிம் அமைப்புகள், பற்பல தொண்டூழிய அமைப்புகள் ஆகியவற்றின் பல்வேறு முனைப்புகளுக்கும், சமூகத்திற்கு இணக்கத்துடன் சேவை செய்வதற்குப் பங்களிக்கும் மற்றவர்களுக்கும் எங்களின் நன்றி உரித்தாகும். நாம் இப்பண்புகளுடன் வாழ முயற்சி எடுத்து, புனித ரமலான் மாதத்திற்குப் பிறகும் அறிவாற்றலை நாடிச்செல்ல வேண்டும்.

நோன்பு திறப்புக்கும், தராவீஹ் தொழுகைக்கும் பல மாலைப்பொழுதுகள் ஒன்று சேர்ந்து செலவிடப்பட்ட கருணை மிகுந்த இம்மாதத்தால், நமது குடும்ப உறவுகள் தொடர்ந்து வலுப்படுகிறது. சவால்மிக்க காலங்களில்கூட நமது குடும்பத்தின் மீள்திறன் நம்மை முன்னேற்றுகிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் வழங்கிய அன்பளிப்பும் அமானிதமும், நமது குடும்ப உறுப்பினர்களை நாம் தொடர்ந்து அரவணைக்க, தன்னலமற்ற அன்பு, பரஸ்பர மரியாதை, தடுமாற்றமில்லாத பொறுமை ஆகியவற்றுடன் துணை நிற்கின்றன.



நமது வீட்டு நலன்களோடு ரமலானை அனுபவித்து, ஷவ்வால் மாதத்தைக் கொண்டாடும் நல்வாய்ப்பு நமக்குக் கிடைத்திருந்தாலும், இயற்கைப் பேரிடர், பூசல்கள், அடக்குமுறை சம்பவங்கள் ஆகியவற்றால் தொடர்ந்து வாழ்க்கைக்குப் போராடும் மற்றவர்கள் இருக்கிறார்கள். இத்தகைய சோதனைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தீங்கிலிருந்து பாதுகாக்கப்பட்டு, விடாமுயற்சி, வலிமை, பொறுமை ஆகியவற்றை ஆசியாகப் பெறவேண்டும் என நாம் பிரார்த்தனை செய்வோமாக.

ஈதுல் ஃபித்ர் நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு முயிஸ் மன்றத்திற்கு, ஆதரவையும் நம்பிக்கையையும் அளித்து வரும் சிங்கப்பூர் முஸ்லிம்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ரமலான் கருணைமிகு உணர்வு ஷவ்வாலிலும் தொடரட்டும். அனைவருக்கும் ஊக்கமளித்து நல்லாசிகளைப் பரப்பும் பரிவுமிக்க உன்னத சமூகத்தை நிர்மாணிக்கும் நமது முயற்சிகளுக்கு ஏகன் அல்லாஹ் எப்போதும் நல்வழி காட்டட்டும்.

---

எண்ணி மகிழ்வதாக ஹாஜி அப்துல் ரஸாக் கூறினார். அதற்காக நமது சமூகத்திற்கு நன்றி பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார். முயிஸ் பற்பல அறப்பணிகளையும், தொண்டூழியச் சேவைகளையும் தொய்வில்லாமல் செய்து வருகிறது. நமது பள்ளிவாசல்கள், மதரஸாக்கள் மற்றும் குடும்பப் பிணைப்பு தொடர்பான நற்பணிகள் அவற்றுள் அடங்கும் என்று அவர் விளக்கினார். சமுதாய மேம்பாட்டுக்குச் சேவையாற்றிவரும் அமைப்புகளுக்கும், அவற்றின் தலைவர்களுக்கும் நன்றி பாராட்டுவது தமது தார்மீகக் கடமை என்றும் ஹாஜி அப்துல் ரஸாக் தெரிவித்தார்.

# தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்க மதரஸா மாணவர் முகாம்

சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், அதன் மதரஸா மாணவர்களுக்கு மூன்றுநாள் முகாமை நடத்தியது. ஜூன் மாதத்தில், ஹாங் ஜிபாட் பள்ளிவாசலில் நடைபெற்ற அந்த முகாமில் 60 மாணவர்கள் பங்கேற்றனர்.

உள்ளரங்க வகுப்புடன் புறப்பாட நிகழ்ச்சிகளும் மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அவர்களுக்கு ஜமாஅத் தொழுகை, திருக்குர்ஆன் சூறா மனப்பாட வகுப்பு ஆகியவையும் நடத்தப்பட்டன.

முகாமின் நிறைவு நாளில் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்துகொண்டனர். சிறந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. யாசின் சூறாவை மனப்பாடம் செய்து ஓதிய 7 மாணவர்கள் பரிசு பெற்றனர்.

மத்திய தெற்கு வட்டார பள்ளிவாசல் குழும பொது நிர்வாகி நஸ்ரின் அபூபக்கர், இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் ஃபரிஹுல்லாஹ் ஆகியோரும் நிறைவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஏற்பாட்டாளர்களுக்குப் பாராட்டு தெரிவித்தனர். இத்தகைய முகாம்களை நடத்துவது மாணவர்களின் மேம்பாட்டுக்கு ஒரு முக்கிய அங்கம் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் தலைவர் ஹாஜி ஹசன் குத்தூஸ் இத்தகைய முகாம்களின் முக்கியத்துவத்தை தமது உரையில் எடுத்துரைத்தார். ஆண்டுதோறும் இந்த முகாம் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் அவர் உறுதி தெரிவித்தார்.

சங்கத்தின் செயலாளர் K.P. முஹம்மது ஜாஃபர், பெற்றோர்கள், தொண்டூழிய ஆசிரியர்கள், மற்றும் ஹாங் ஜிபாட் பள்ளிவாசல் நிர்வாகக் குழுவினர் அளித்த ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

### இஃப்தார்

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் நோன்பு திறப்பு நிகழ்ச்சியை அல்அப்ரார் பள்ளிவாசலில் 26-7-2014அன்று நடத்தியது. சிண்டாவின் தலைவர் திரு.பரதன், திரு.தேவேந்திரன் உள்ளிட்ட பலசமயப் பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அனைவரையும் வரவேற்றுப் பேசிய சங்கச்செயலாளர் முஹம்மது ஜாஃபர், நாம் அனைவரும் ஒற்றுமையையும் சகோதரத்துவ உறவையும் மேம்படுத்தவேண்டும் என்றார். தங்கள் சங்கம் 75ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளதையும் அவர் தெரிவித்தார்.

சிண்டாவின் தலைவர், நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயல்படவேண்டும், அதுவே சிண்டாவின் குறிக்கோள். இத்தகைய நிகழ்ச்சிகள் அதற்கு முன்னுதாரணமானவை என்று குறிப்பிட்டார்.

சகோதரத்துவமே நோன்பின் முதல்படி என்று அல்அப்ரார் பள்ளிவாசல் இமாம் மில்லத் இஸ்மாயில் தமது உரையில் சுட்டிக் காட்டினார்.

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத் தலைவர் ஹசன் குத்தூஸின் உரையுடன் நோன்புத் திறப்பு நடைபெற்றது.



# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க நோன்பு திறப்பு நிகழ்ச்சி

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் சிங்கப்பூர் கிளை 19-7-2014 அன்று சிங்கப்பூர் பென்கூலன் பள்ளிவாசலில் நோன்பு திறப்பு மற்றும் சமய இன நல்லிணக்க நிகழ்ச்சியை நடத்தியது. சிங்கப்பூரின் ஒற்றுமை, சமய, மற்றும் இன நல்லிணக்கத்தைப் புலப்படுத்திய இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக பிரதமர் அலுவலக அமைச்சரும், இரண்டாம் உள்துறை, மற்றும் வர்த்தக, தொழில் அமைச்சருமான எஸ். ஈஸ்வரன் கலந்து கொண்டார். "இணையத்தின் வழியாக இன்று ஏற்பட்டு வரும் தாக்கங்களையும், நம்மை எதிர்நோக்கி வருகின்ற சவால்களை சமாளிக்கவும், நாம் ஒன்றுபட்ட சமுதாயமாக சமூக ஒற்றுமையுடன் தொடர்ந்து திகழ வேண்டியது பெரிதும் அவசியம்" என்று வலியுறுத்தினார் அமைச்சர் ஈஸ்வரன். கடந்த நான்கு ஆண்டுகளாக சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் ஆற்றி வரும் கல்விசார்ந்த சமுதாயப் பணி பாராட்டுக்குரியது என்று அவர் குறிப்பிட்டார்.

பென்கூலன் பள்ளிவாசலின் இமாம், அல்ஹாபிழ் மௌலவி எஸ். ஏ. கலீல் அஹமது ஹசனி கிராஅத் ஓதி, நிகழ்ச்சியைத் துவங்கி வைத்தார். வரவேற்புரை வழங்கிய சங்கத்தின் தலைவர் முனைவர் கணக்காய்வாளர் ஹாஜி முஹிய்யத்தீன் அப்துல் காதர், சிங்கப்பூரின் உற்பத்தித் திறன் பெருகுவதற்கு பங்களிக்கும் வகையில், இச்சங்கம் ஆற்றிய சமூகப்பணிகளை எடுத்துரைத்தார். எம்.இ.எஸ். (MES) குழுமத்தின் தலைமை நிர்வாகி ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல், அமைச்சருக்கு பொன்னாடைப் போர்த்தி கௌரவித்தார். பென்கூலன் பள்ளிவாசலின் துணைத்தலைவர் ஹாஜி முஹம்மது ரபீக், அமைச்சர் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் நினைவுப்பரிசு வழங்கினார். சங்கத்தின் துணைத்தலைவர் ஜனாப் கலந்தர் மொஹிதீன் நன்றி கூறினார். கணிதப் பேராசிரியர் ஜனாப் அமானுல்லாஹ் நிகழ்ச்சியை வழிநடத்தினார்.

சிண்டா, ஜாமியா சிங்கப்பூர், இந்திய முஸ்லிம் பேரவை, சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், ஐக்கிய இந்திய முஸ்லிம்




சங்கம், கூத்தாநல்லூர் சங்கம், தோப்புத்துறை முஸ்லிம் சங்கம், கீழக்கரை நலனபிவிருத்தி சங்கம், காயல்பட்டினம் நலனபிவிருத்தி சங்கம், ரிபாயி தரீகா சங்கம், நாகூர் சங்கம், முத்துப்பேட்டை சங்கம், பொதக்குடி சங்கம், வளர் தமிழ் இயக்கம், சிங்கை தமிழ்ச் சங்கம், தமிழ் பட்டிமன்ற கலைக்கழகம், கற்க கசடற அமைப்பு, முஸ்தபா தமிழ் அறக்கட்டளை ஆகியவை இந்த இஃப்தார் நிகழ்ச்சியில் கலந்துகொண்டன. பிரபல எழுத்தாளர்கள் ஜே.எம்.சாலி, டாக்டர் ஹிமானா சையத், இராம கண்ணபிரான், யூசுப் ரஜித், ஷாநவாஸ் அப்துல் காதர், மற்றும் பல சமூகத் தலைவர்கள், சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## நபி மொழி

'நற்செயல்களில் அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமானது எது?' என்று நபி(ஸல்) அவர்களிடம் வினவப் பட்டது. அதற்கு அவர்கள், '(எண்ணிக்கையில்) குறைவாக இருந்தாலும், (தொடர்ந்து செய்யப்படும்) நிலையான நற்செயலே' என்று விடையளித்தார்கள். மேலும், 'நற்செயல்கள் புரிவதில் இயன்றவரை அதன் எல்லையைத் தொட முயலுங்கள்' என்றும் கூறினார்கள்.'
அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி),
ஆதாரம் : புகாரி

# சமூக ஐக்கியத்தை மேம்படுத்திய இனிய இஃப்தார் நிகழ்ச்சிகள்

புனித ரமலான் மாதத்தில் சிங்கப்பூரில் நடைபெற்ற இஃப்தார்-நோன்பு திறப்பு நிகழ்ச்சிகள் சமய நல்லிணக்கதையும், சமூக ஒருங்கிணைப்பையும் வலுப்படுத்தின. பள்ளிவாசல்களிலும் சமய அரங்குகளிலும் இடம்பெற்ற இஃப்தார்களில் பிரதமரும், அமைச்சர்களும், உயரதிகாரிகளும், சமூகத் தலைவர்களும் கலந்துகொண்டு பல சமய, சமூக ஐக்கியத்தை எடுத்துரைத்தனர்.

புதுப்பிக்கப்பட்ட அல் முஜாஹிதீன் பள்ளிவாசலில் நடைபெற்ற இஃப்தாரில் பிரதமர் லீ சியன் லூங் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சர் சான் சுன் சிங், அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் ஆகியோருடன் முயிஸ் உறுப்பினர்களும் பங்கேற்றனர். ஸ்டெர்லிங் சாலையிலுள்ள இப்பள்ளிவாசலில் 21-7-2014அன்று சிறப்பாக இஃப்தார் இடம்பெற்றது. பள்ளிவாசல் நிர்வாகக் குழுவினரும் தொண்டூழியர்களும், இதனை முன்னின்று நடத்தினர்.

மவுண்ட் பிளசண்ட் சாலையிலுள்ள மூத்த போலீஸ் அதிகாரிகள் மன்றத்தில் 10-7-2014 மாலையில், இடம்பெற்ற இஃப்தாரில் துணைப் பிரதமர் தியோ சீ ஹியனும், தகவல் தொடர்பு அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிமும் கலந்து கொண்டனர். அவர்களுடன் பல சமயத் தலைவர் களும் பங்கேற்றனர். சமூக நல்லிணக்கத்தைக் கட்டிக்காக்க நமது பல இன சமூகங்களை எவ்வாறு ஈடுபடுத்தலாம் என்பது பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றது. சமூகத் தலைவர்களும், முஸ்லிம் அல்லாதவர்களும் இணைந்து பல ஆண்டுகள் பணியாற்றி வந்துள்ளதை துணைப் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அரசங்கம் சமூகத் தலைவர்களை அவ்வப் போது சந்தித்து, சமூக ஒற்றுமை குறித்து வலியுறுத்தி வருவதை முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் குறிப்பிட்டார். முஸ்லிம் அல்லாத நமது சகோதர சகோதரிகளிடம், சமயங்களுக்கிடையிலான நன்னம்பிக்கைக் குழுக்கள் மூலம் கலந்துரையாடி சமூகப் பிணைப்பை அரசாங்கம் வலுப்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்திய முஸ்லிம் பேரவை 20-7-2014 மாலை, பென்கூலன் பள்ளிவாசலில் நடத்திய நோன்பு திறப்பு, சமய நல்லிணக்கத்துக்கு முன்னுதாரணமாக அமைந்தது. உள்துறை மற்றும் வெளியுறவு அமைச்சுகளுக்கான மூத்த துணை அமைச்சர் மஸகோஸ் ஜுல்கிஃப்லி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்து, கிறிஸ்துவ, சீக்கிய, பவுத்த சமய, சமூகத் தலைவர்களும் இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர்.

இன, சமய வேறுபாடுகள் இல்லாமல் எந்தத்



தருணத்திலும் ஒன்றுபட்டு செயல்படவும், பல சமயங்களின் நடைமுறைகளை உணர்ந்து கொள்ளவும் இது போன்ற நிகழ்ச்சிகள் பெரிதும் உதவும் என்று இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் ஃபரியுல்லாஹ் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரில் பல்லாண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பல இன, சமுதாயச் சூழலை பலநாடுகளில் காணமுடியாது. இங்கு நிலவிவரும் அமைதிக்கும் ஒற்றுமைக்கும், சமய சமூக நல்லிணக்கமே முக்கிய காரணம் என்று அமைச்சர் தமது உரையில் தெரிவித்தார். இந்த அமைதியையும் ஒற்றுமையையும் நாம் என்றென்றும் பின்பற்ற வேண்டும்; பேணிக் காக்கவேண்டும் என்றும் மஸகோஸ் ஜுல்கிஃப்லி கூறினார்.

ஜாமியா சிங்கப்பூர் அமைப்பு அதன் கேலாங் தலைமையகத்தில், ஜுலை 16 மாலை நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை நடத்தியது. 'நண்பர்களுடன் இஃப்தார்' எனும் இந்த நிகழ்ச்சிக்கு, அமைச்சர் சான் சுன் சிங் சிறப்பு விருந்தினராக அழைக்கப் பட்டிருந்தார். பல இன, பல சமய, அன்பர்களும் அரசதந்திரிகளும் கலந்து கொண்டனர்.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜாமியா சிறுவர் இல்லத்தில் ஜுலை முதல் வாரத்தில் நோன்புதிறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பிரதமர் அலுவலக அமைச்சரும், உள்துறை மற்றும் வர்த்தக தொழில்துறை இரண்டாம் அமைச்சருமான எஸ்.ஈஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஜாமியா சிறுவர் இல்லத்தில் 100 பேர் வரை வசித்து வருகின்றனர். அவர்களுக்கு ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தினர் 20 வெள்ளி வீதம் அன்பளிப்புத் தொகை வழங்கினர். ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் இந்த இஃப்தார் நிகழ்ச்சியில் சிண்டாவின் ஆதரவுடன் வசதிகுறைந்த 36 குடும்பங்களுக்குப் பற்றுச் சீட்டுகளையும் அளித்தது.

# PHOTO NEWS

# படச் செய்திகள்



Launch of Masjid Kampong Holland commemorative book, Mujahidin Mosque, 21 Jun 2014




Launch of Sentuhan Ramadhan Campaign 2014, Ahmad Ibrahim Mosque, 22 Jun 2014




MUIS Awards ceremony, Orchard Hotel, 21 Jun 2014



MUIS Iftar at Masjid Alkaff, Upper Serangoon Road, 14 Jul 2014



Ramadhan disbursement ceremony, SIH, 8 Jul 2014



Wakaf disbursement, SIH, 29 May 2014



Naming and unveiling of Maarof Mosque at Jurong West, view from Jurong West St, 27 Jun 2014



Model of enhanced Al Huda Mosque, Jln Haji Alias (near Sixth Ave), unveiled on 30 May 2014

# உன்னத சமய, சமூக நற்பணிச் செல்வர்
# உஸ்தாத் முஹம்மது இப்ராஹிம் காசிம் பிரிவு

சிங்கப்பூரின் இன, சமய நல்லிணக்கத்தை ஊக்குவிக்க அரும்பெரும் பங்காற்றியவர் மறைந்த உஸ்தாத் முஹம்மது இப்ராஹிம் காசிம் என்று பிரதமர் லீ சியன் லூங் மனம்திறந்து இரங்கல் செய்தியில் குறிப்பிட்டதை மறக்க முடியுமா?

"சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்துக்கும் சிங்கப்பூருக்கும் அவர் முக்கிய பங்காற்றறியுள்ளார். தீவிரவாதிகள் பரப்ப முயன்ற மாறுபட்ட இஸ்லாமிய சித்தாந்தங்களைக் களைய அரசாங்கத்துடனும், முஸ்லிம் சமூகத்துடனும் அவர் அணுக்கமாக உழைத்தார். நமது பல இன சமுதாயத்தை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அறிந்து சகிப்புத்தன்மை, பரஸ்பர மரியாதை ஆகியவற்றைப் பற்றி அடிக்கடி பேசினார் உஸ்தாத் இப்ராஹிம்"

பிரதமரின், இரங்கல் செய்தி அனைவரையும் நெகிழ வைத்தது. அரை நூற்றாண்டுக்கு மேல் அயராது சமய, சமூக நற்பணியாற்றிய பெருமகன் உஸ்தாத் முஹம்மது இப்ராஹிம் காசிம் தமது 86ஆம் வயதில் 8-5-2014அன்று காலமானார். தெக்வாயில் அமைந்துள்ள அல் கைர் பள்ளிவாசலில் அவருக்கான இரங்கல் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட தகவல், தொடர்பு, முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், உஸ்தாத் இப்ராஹிம் ஆற்றிய அரிய பணிகளை நினைவு கூர்ந்தார்.

"அவர் மிகவும் எளிமையானவர். தன்னடக்கம் மிகுந்தவர். அறிவாற்றல் நிறைந்தவர். அனைவரின் பொதுநலத்தையும் மகிழ்ச்சியையும் விரும்பியவர்" என்று அமைச்சர் குறிப்பிட்டார். இஸ்லாத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமின்றி, அனைவருக்கும் சிங்கப்பூரைச் சிறந்த இடமாக உருவாக்குவதிலும் அவர் கவனம் செலுத்தினார். யாரிடமும் அவர் பாகுபாடு பார்த்ததில்லை" என்றும் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் குறிப்பிட்டார்.

துணைப் பிரதமர் தியோ சீ ஹியனும் உஸ்தாத் இப்ராஹிம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் செய்தியை தமது ஃபேஸ்புக் இணையப் பக்கத்தில் பதிவு செய்திருந்தார்.

"உஸ்தாத் இப்ராஹிம் காசிம் சமூக மறுவாழ்வுக் குழுவில் இடம்பெற்றது உள்ளிட்ட பல வழிகளில் சமூகத்திற்கு முக்கியப் பங்காற்றியுள்ளார். பல முறை அவரை நான் சந்தித்துப் பேசியிருக்கிறேன். அவருடைய தன்னடக்கமும், அறிவாற்றலும் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன" என்றார் துணைப்பிரதமர்.



உஸ்தாத் முஹம்மது இப்ராஹிம் காசிம் பற்பல விருதுகளைப்பெற்றார். முயிஸ் 2011ல் மதிப்பு மிக்க ஜாஸா செமர்லாங் விருதை வழங்கியது. சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்திற்கு நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மார்க்கப் பணியாற்றி வருகிறார் இவர். அவை முன்னுதாரணமானவை என்று பாராட்டி விருதை வழங்கினார் அன்றைய அதிபர் எஸ்.ஆர். நாதன். உஸ்தாத் முஹம்மது இப்ராஹிம் அவர்களுக்கு தமிழ், உருது, மலாய், ஆங்கிலம், அரபு மொழிகள் தெரியும். பல்வேறு இன, சமூக மக்களுடன் எளிதாகப் பழகக்கூடியவர் இவர் என்றும் திரு. நாதன் பாராட்டினார்.

உஸ்தாத் முஹம்மது இப்ராஹிம் முஸ்லிம் திருமணப் பதிவகத்தில் துணை உறுதிமொழியாளராகவும், சிங்கப்பூர் ஷரியா நீதிமன்றத்தில் நடுநிலை நீதிபதியாகவும் சேவையாற்றி வந்தார். பல பள்ளிவாசல்களிலும், மலாய், முஸ்லிம் அமைப்புகளிலும் மார்க்கக் கல்விபோதனை மற்றும் திருக்குர்ஆன் வகுப்புகளையும் அவர் நீண்டகாலமாக நடத்தி வந்ததை நமது சமூகம் நன்கறியும். புனித ஹஜ், உம்ரா பயணங்களுக்கு வழிகாட்டியாகவும் அவர் பணியாற்றி வந்தார்.

மணவாழ்க்கையில் பிரச்சினைகளுக்கு இலக்கான தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்குதல், சிறைச்சாலை கைதிகளை நல்வழிப்படுத்த ஆலோசனை வழங்குதல் ஆகிய பணிகளையும் உஸ்தாத் முஹம்மது இப்ராஹிம் செய்து வந்தார்.

# பெரும்புலவர்-பேராசிரியர் சி.நயினார் முஹம்மது நினைவுக் கூட்டம்



திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் முதல்வர், பெரும் புலவர், முனைவர் சி. நயினார் முஹம்மது கடந்த 23-7-2014 அன்று அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில், 85 வயதில் காலமானார். அவருடைய கல்விப் பணியையும், தமிழ்ப் பணியையும், சமூக நற்சேவைகளையும் நினைவு கூரும் கூட்டம் சிங்கப்பூரில் நடைபெற்றது. திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க சிங்கப்பூர் கிளையின் ஏற்பாட்டில், பென்கூலன் பள்ளிவாசல் பன்னோக்கு அரங்கத்தில் 3-8-2014அன்று மாலை 4 மணியளவில் கூட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் ஆடிட்டர் ஹாஜி முஹிய்யத்தீன் அப்துல் காதர் தலைமை வகித்தார். சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ஜனாப் பரீஜ் முஹம்மது கிராஅத் ஓதி கூட்டத்தைத் துவங்கி வைத்தார். பெரும் புலவர் மர்ஹூம் சி. நயினார் முஹம்மது அவர்களைப் பற்றிய முக்கிய குறிப்புகளை, சங்கத்தின் துணைத் தலைவர் கலந்தர் மொஹிதீன் எடுத்துரைத்தார்.

மூத்த எழுத்தாளர் ஜே.எம்.சாலி, பன்னூல் ஆசிரியர் டாக்டர் ஹிமானா சையத், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் பொதுச்செயலாளர் ஹாஜி மு.அ.மசூது, விரிவுரையாளர் அப்துல் கரீம், எழுத்தாளர் ஷாநவாஸ் அப்துல் காதர், கணிதப் பேராசிரியர் அமானுல்லாஹ் ஆகியோர் கலந்துகொண்டு பெரும்புலவர் ஆற்றிய பணிகளை நினைவுகூர்ந்தனர். பென்கூலன் பள்ளிவாசலின் இமாம், உஸ்தாத் ஹாஜி அப்துல் கையூம் பாகவி அவர்கள் சிறப்பு துஆ ஓதினார். சமூகப் பிரமுகர்களும், கல்லூரியின் முன்னாள் மாணவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் 32 ஆண்டுகள் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும், பின்னர் 4 ஆண்டுகள் அக்கல்லூரியின் முதல்வராகவும் அரும்பணியாற்றியவர், பின்னர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்



கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். குன்றக்குடி அடிகளார் இவருக்கு “பெரும் புலவர்” பட்டம் வழங்கி பெருமிதப்படுத்தினார். திருக்குர்ஆனுடன் திருக்குறள் எப்படி ஒத்துப் போகிறது என ஆய்வுக் கட்டுரை எழுதி மதச்சார்பின்மைக்கு வித்திட்டவர். “குறள் ஞாயிறு” என்ற விருது பெற்ற பெருமகன் இவர்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதனுடன் இணைந்து “தமிழகப் புலவர்” குழுவை உருவாக்கி, அதன் செயலாளராக 28 ஆண்டுகள் பணியாற்றியவர். மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் “தமிழ்ச் செம்மல்” என்ற பட்டம் வழங்கி இவரைக் கவுரவித்தது.

“இஸ்லாமிய இலக்கியக் கழகம்” எனும் அமைப்பை தோற்றுவித்து, ஐந்து அனைத்துலக இலக்கிய மாநாடுகளை நடத்தி, அதன் மூலம் இஸ்லாமிய இலக்கியத்தை மக்களிடையே கொண்டு சேர்த்த பெருமகன் இவர். திருச்சி தமிழ்ச் சங்கத்தின் துணை அமைச்சராக இறக்கும் வரை இருந்தவர். உலகத் திருக்குறள் பேரவை இவருக்கு “திருக்குறள் நெறி தொண்டர்” என்ற விருது வழங்கி சிறப்பித்தது. பல அரிய நூல்களை எழுதி, தமிழ்மொழி வளர்ச்சிக்கும், சமூகத்திற்கும் பெரும் பங்களிப்பை வழங்கிய பெருமைக்குரியவர் பேராசிரியர் சி. நயினார் முஹம்மது. அவருக்கு மனைவி, மகள், நான்கு மகன்கள் உள்ளனர். பிள்ளைகள் அனைவரும் பொறியியல் நிபுணர்கள்.

# மூத்த கவிஞர் சீனி நைனா முஹம்மது மறைவு

சிறந்த தமிழறிஞரும், 2011இல் அனைத்துலக இஸ்லாமியத் தமிழிலக்கிய மாநாட்டை டத்தோ ஹாஜி இக்பால், புலவர் ப.மு.அன்வர் ஆகிய பெருமக்களுடன் இணைந்து மிகவும் வெற்றிகரமாக நடத்தியவரும், தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட மலேசியாவின் மாண்பார்ந்த குடிமகனும் ஆன மூத்த கவிஞர் சீனி நைனா முஹம்மது அவர்கள் 8-8-2014அன்று பினாங்கில் காலமானார்.

கவிஞர் செ. சீனி நைனா முஹம்மதுவின் இலக்கிய, இதழியல், சமூக நற்பணிகள் பரவலானவை.

கவிஞர் சீனி நைனா முஹம்மது 'உங்கள் குரல்' மாத இதழை 16 ஆண்டுகள் நடத்தி மலேசியத்தமிழ் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியுள்ளார். தலையங்கம், கவிதை, சிறுகதை, மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்த உதவும் தமிழ்ப் பாடத்திட்ட ஆய்வுக் கட்டுரைகள், மூத்தோர் பெரியோரை நினைவில் நிறுத்தும் செய்திக் கோவைகள் அனைத்தும் உங்கள் குரலில் இடம்பெற்று வந்தன. ஊடகங்களில் அடிக்கடி காணப்படும் அடுக்கடுக்கான பிழைகள் முதலான அவருடைய கட்டுரைகள் மறக்க முடியாதவை.

மலேசிய வானொலியில் 'தொல்காப்பிய கடலின் ஒரு துளி' எனும் தொடர் உரையை நிகழ்த்திவந்த கவிஞர் சீனி நைனா முஹம்மது உங்கள்குரல் இதழிலும் அதனை வெளியிட்டு வந்தார். அவர் இயற்றிய கவிதைகள் எண்ணற்றவை. ஏக இறைவனின் மாண்பையும், அண்ணல் நபிகளாரின் அரும் பண்பையும், திருக்குர்ஆன் போதனைகளையும் இனிய கவிதைகளாகப் படைத்துள்ளார். 2011 மலேசிய உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டு மலரில் இடம் பெற்றுள்ள 'பேரழகைக் காண்பேனா', கவியரங்கில் படித்த 'அண்ணல் நபியின் அழகிய பண்புகள்-அருள்' ஆகியவை சிறந்த எடுத்துக் காட்டுகள்.

நல்லார்க்கினியன், இல்லார்க்கினியன், கரும்பன், அபு பரிதா, இபுனு செய்யிது முதலான புனைபெயர்களிலும் சீனி நைனா முஹம்மது எழுதிவந்ததை வாசகர் வட்டம் நன்கறியும்.



மலேசிய அரசாங்க கல்வித் துறையின் சார்பில் மாணவர்களுக்கும், தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இலக்கியச் சொற்பொழிவுகள், இலக்கணப் பயிலரங்குகள், கவிதைப் பட்டறைகள் ஆகியவற்றை அவர் நடத்தி வந்தார்.

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டை வழிநடத்தும் குழுவில் முக்கிய இடம் பெற்றிருந்தார் கவிஞர் சீனி நைனா முஹம்மது. மாநாட்டுப்பேராளர்களை அணிதிரட்டும் முயற்சியில் தலைவர் டத்தோ இக்பால் முதலானோருடன் நாடு நகரங்களைச் சுற்றி வந்தார் அவர்.

சீனி நைனா முஹம்மது அவ்வப்போது சிங்கப்பூர் நிகழ்ச்சிகளில் பங்கேற்று உரையாற்றியிருக்கிறார். சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் முதலான அமைப்புகள் அவரை அழைத்து சிறப்பித்துள்ளன.

தமிழ்நாட்டில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டபோது உங்கள்குரல் பத்திரிகையின் மூலம் மலேசியாவின் சார்பில் தமிழ்ச் செம்மொழி சிறப்பு மலரை அவர் வெளியிட்டார். கோலாலம்பூர் நேத்தாஜி மண்டபத்தில் 25-8-2008இல் அந்த சிறப்பு மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது.

நைனா முஹம்மது மலேசியாவில் தொல்காப்பிய வகுப்பை நடத்தி வந்தார். அந்தப் பணியைப் பாராட்டி தமிழகத்தின் தமிழ்ச்சுரங்கம் அமைப்பு அவருக்குத் தொல்காப்பிய அறிஞர் எனும் விருதை வழங்கியது.

முன்னணி இதழாசிரியரும் மரபுக் கவிஞருமான சீனி நைனா முஹம்மது அவர்களின் மறைவு பலவகையிலும் பேரிழப்பாகும் என்று மலேசிய இலக்கிய வட்டம் இரங்கல் தெரிவித்தது.-எம்.எஸ்.

# ஜாஸா பக்தி விருது பெற்றார் ஹாஜி முஹம்மது ரஃபீக்

சமூக நற்பணியாற்றிவரும் ஹாஜி முஹம்மது ரஃபீக் அவர்களுக்கு சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றம்-முயிஸ் ‘ஜாஸா பக்தி’ விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

பென்கூலன் பள்ளிவாசல் நிர்வாகக் குழுவின் துணைத் தலைவரான அவர், 21-6-2014அன்று அதிபர் டோனி டான் அவர்களிட மிருந்து இவ்விருதைப் பெற்றுக்கொணடார். சமூக ஆர்வலரான 49 வயது ஹாஜி முஹம்மது ரஃபீக், ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் ஆலோசகர், கம்போங் கிளாம் தொகுதி அடித்தளத் தலைவர், அக்கம்பக்க கண்காணிப் புக் குழுவின் உதவிதொடர்பு அதிகாரி, சமரச அதிகாரி முதலான பொறுப்புகளையும் வகிக்கி றார்.

முயிஸ் வழங்கியுள்ள ஜாஸா பக்தி விருது மென்மேலும் சமூக நற்பணிகளைச் செய்யவும், நல்லிணக்கத் தொண்டூழியம்




புரியவும் தனக்கு ஊக்கத்தை தந்துள்ளது என்று மனநிறைவுடன் கூறினார் ஹாஜி முஹம்மது ரஃபீக். அல்லாஹ்வின் நல்லருளாலும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் நல்லாசியுடனும், நமது சமய. சமூக நற்பணிகளை என்றென்றும் தொடர விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

---

# மரபுடைமைப் புரவலர் எஸ்.எம். ஜலீல்

தொழில் முனைவர் ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல் அவர்களுக்கு மரபுடைமைப் புரவலர் விருது வழங்கப்பட்டிருக்கிறது.

கலாசார, சமூக, இளையர் விளையாட் டுத் துறை அமைச்சர் திரு. லாரன்ஸ்வோங் தேசிய மரபுடைமைக் கழகத்தின் இந்த விருதை 25-4-2014அன்று வழங்கிச் சிறப்பித்தார். மொழி, மரபுடைமை உட்பட பல்வேறு நற்பணிகளுக்கு வள்ளல் தன்மையுடன் முன்வந்து தொடர்ந்து ஆதரவு நல்கிவரும் ஜலீல் அவர்களின் பங்களிப்பபை அங்கீகரித்து அளிக்கப்பட்ட விருது இது.

மரபுடைமை தொடர்பான பல நடவடிக் கைகளுக்கும் ஆதரவு நல்கி வரும் தனிநபர்களை யும், நிறுவனங்களையும் அங்கீகரித்துப் பாரா ட்டும் இவ்விருதை 2006ல் மரபுடைமைக் கழகம் தொடங்கியது. ஹாஜி ஜலீலுக்கும், பல தனிநப ர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இவ்வாண்டுக்கு ரிய விருதுகள் வழங்கப்பட்டன.

தமிழ்மொழி மற்றும் மரபுடைமை தொடர்பான நடவடிக்கைகளுக்குத் தம்மால் முடிந்த அளவு ஆதரவு வழங்கிவருவதாக அவர் தெரிவித்தார். அவர் 2011 ஜூலை மாதம் எஸ். எம்.ஜலீல் அறக்கட்டளையைத் தொடங்கினார்.

புரவலரும் சமூக ஆர்வலருமான எஸ்.எம்.ஜலீல், கடந்த ஆண்டில் இரண்டு விருதுகளைப் பெற்றார். முயிஸ் 2013ஆம் ஆண்டுக்கான நற்சேவை விருதை அளித்தது. அவருடைய சமூகத் தொண்டைப் பாராட்டி தப்லா சமூகவெற்றியாளர் விருதும் வழங்கப்பட் டது.

தொழிலதிபர் எஸ்.எம். ஜலீல் 2005ஆம் ஆண்டு தேசிய தினத்தின்போது பிபிஎம்-PBM பொதுச்சேவை நட்சத்திர விருது பெற்றதை அறிவோம்.

# பல இன, பல சமய சிங்கப்பூருக்கு இந்திய முஸ்லிம்களின் பங்களிப்பு

சிங்கப்பூரில் இந்திய முஸ்லிம்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும், மொழி, சமயம், வகஃப், கலை, இலக்கியம், இதழியல், ஊடகம், அறநெறி உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் மிக முக்கியமான, முன்னுதாரணமான பங்காற்றியு ள்ளனர்.

இந்திய முஸ்லிம்களின் சாதனைக்கும் பங்களிப்புக்கும் உலக அளவில் உன்னதமான எடுத் துக்காட்டாகத் திகழும் ஒரேயொரு மரபுடைமை நிலையம் சிங்கப்பூர் நாகூர் தர்கா மரபுடைமை நிலையமே ஆகும்.

இந்திய முஸ்லிம்களின் பங்களிப்பையும், வரலாற்றையும் பிற சிங்கப்பூரர்கள், மற்றும் உலக மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் சகோதரர் ராஜா முஹம்மது, சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்க ளைப் பற்றிய முதலாவது ஆங்கில ஆவணப் படத் தைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

பரக்கத்-நமது முன்னோட்ட சக்தி -"Barakath - Our Pioneering Spirit" எனும் இந்த ஒருமணி நேர ஆவணப் படம் உயர்வும், உழைப்பாற்றலும் மிக்க சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்களின் சாதனைத் திறனை எடுத்துரைக்கும் படமாகும். இங்கு வந்து செல்லும் பன்னாட்டு இந்தியர்களும் நமது சாதனைகளைக் கண்டு வியக்கின்றனர். முன்னாள் அதிபர் எஸ்.ஆர். நாதன், அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், ஊடகக் கலைஞர் முஹம்மது ரஃபி, முன்னாள் காற் பந்து விளையாட்டுத் தலைவர் சமத் அல்லாபிச்சை ஆகியோரின் பேட்டிகள் இப்படத்தில் இடம் பெறுகின்றன.

சகோதரர் ராஜா முஹம்மது, பரிசு பெற்ற குறும்படத் தயாரிப்பாளரும், இயக்குநருமான முஹம்மது யாசிரின் சேவையையும் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

இத்திட்டத்திற்கு தேசிய மரபுடமைக் கழகம், மரபுடமை நிதி மூலம் உதவி வழங்கியிருக்கிறது. படம் முடிவடைந்ததும் NDIMHC அரங்கில் காட்சிக்கு வைக்கப்படும்.

ராஜா முஹம்மது அவர்கள் இதற்குமுன் "சிங்கை நாடு" 2012 தேசிய தின தமிழ்ப் பாடலைத் தயாரித்து வழங்கினார். இவ்வாண்டில் அவருடைய பரக்கத்-Barakath படத்தை நாம் எதிர்பார்க்கலாம். அவருடைய முயற்சிகளுக்கு நமது நல்வாழ்த்துக ளைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவருடைய பய னுள்ள சமுதாய, நாட்டு நற்பணி தொடர நல்லாசி வழங்குவோம்.




சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்ற உறுப்பினர், ராஜா முஹம்மது அவர்கள், இவ்வாண்டு சிங்கப்பூர் ஹஜ் குழுவிற்கு, தலைமை தாங்கி, சௌவுதி அரேபியாவிற்கு செல்லயிருக்கின்றார் என்ற நற்செய்தியை அறிவிக்கின்றோம். குழுத்தலைவர் என்ற முறையில் சிங்கப்பூர் ஹஜ் பயணிகளுக்கு தேவைப்படும் உதவிகளை செய்வதோடு, குழுவின் பொறுப்புகளையும், செயல்பாடுகளையும் சிறப்பாக செய்து முடிக்க, துவா செய்து வாழ்த்துகிறோம். அல்லாஹ் (சுபுஹானதஆலா) அவருக்கும், குழுவினருக்கும், ஏனைய ஹஜ் யாத்திரையாளர்களுக்கும், வெற்றியை அளிப்பானாக. ஹஜ் மப்ரூர். ஆமீன்.